தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.4.2025) சென்னை, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் முன்னாள் தலைவர் டாக்டர் சாந்தா அவர்களின் நினைவு அருங்காட்சியகத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ் குமார், அடையாறு புற்றுநோய் மருத்துவமனை தலைவர் என். எல். ராஜா, இயக்குநர் டாக்டர் கல்பனா பாலகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள், இந்து குழும இயக்குநர் என்.ராம், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.4.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷா நவாஸ் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

நமது முதலமைச்சர்

அரசு ஊழியர்களின் நலனில் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்!

சட்டப்பேரவையில் – ‘பழைய ஓய்வூதியத் திட்டம்’ குறித்த வினாவுக்கு – அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

சென்னை, ஏப். 23 -

சட்டப்பேரவையில் ஓய்வூதியத் திட்டம் தொடர்பான வினாவுக்கு விரிவான பதிலளித்த நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, “ நமது முதலமைச்சர் அரசு ஊழியர்களின் நலனில் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்” என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில், நேற்று கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

திருமதி கு.மரகதம் குமரவேல்: மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாவிட்டாலும், அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

பழைய ஓய்வூதியத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

இலட்சக்கணக்கான தமிழ்நாடு அரசு ஊழியர்கள் உங்கள்மீது நம்பிக்கை வைத்து, வாக்களித்து அமைச்சரவையில் அமர வைத்துள்ளார்கள்.

அமைச்சர் தங்கம் தென்னரசு: உள்ளபடியே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அரசு ஊழியர்களின் நலனில் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் ஊழியர்களின் கோரிக்கையை அரசு மிகுந்த கவனத்தோடு பரிசீலித்திருக்கிறது.

நான் நிதிநிலை அறிக்கையில்கூட அரசு ஊழியர்களுக்குத் தேவையான அந்த அறிவிப்புகளை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய அளவிலே நான் வெளியிட்டிருக்கிறேன். தொடர்ந்து அவர்களுக்கு பல கோரிக்கைகள் இருக்கின்றன.

ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில், தற்போது அரசு ஒரு குழுவை நியமித்திருக்கிறது. கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்த குழுவிற்கான terms of reference காலவரையறைகள் தரப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவை குறித்தும்கூட பல்வேறு அரசு ஊழியர்கள் சங்கங்கள், ஆசிரியர்கள் அரசுக்கு பல கருத்துகளை தந்திருக்கிறார்கள்.

பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், நானும் அவரிடத்திலே பல முறை பேசியிருக்கிறோம். எனவே, அரசும் முதலமைச்சர் அவர்களும் அனைத்து கோரிக்கைகளையும் மிகுந்த கவனத்தோடு அரசு தன்னுடைய கருத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதுசம்பந்தமாக, நான் முதலமைச்சர் அவர்களோடு பேசி, அவர்கள் கேட்டிருக்கக்கூடிய கோரிக்கை பற்றி அந்தக் குழுவிலும் விவாதித்து, அதுகுறித்து உரிய நேரத்தில் சரியான முடிவுகளை அரசு மேற்கொள்ளும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சென்னை - வள்ளுவர் கோட்டத்தில் ரூ.80 கோடி மதிப்பில் புனரமைப்பு பணி!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு செய்தார்!

சென்னை, ஏப். 23 -

சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் நேற்று (22.04.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனை தொடர்ந்து அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த பொழுது சென்னையில் சிறப்பு வாய்ந்த வகையில் அய்யன் திருவள்ளுவரைப் போற்றுகின்ற வகையில் கோட்டம் அமைக்கப்பட்டது. 1976ஆம் ஆண்டு திறக்கப்பட்ட இந்த வள்ளுவர் கோட்டம் இடையிடையே பராமரிப்பு பணிகள் இல்லாமல் சிதிலமடைந்தது.

இந்த நேரத்தில், தமிழ் நாட்டின் முதலமைச்சராக அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடந்த ஆண்டுக்கு முந்தைய ஆண்டு இதற்கென ஏறத்தாழ சுமார் 80 கோடி ரூபாய் நிதியை தந்து மிகச் சிறப்பாக புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அந்த வகையில் வள்ளுவர் கோட்டப்பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டு வருகிறது. பராமரிப்பு பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டி இருக்கிறது.

வள்ளுவர் கோட்டம் சுமார் 80 கோடி ரூபாய் பணிகள் இன்றைக்கு புதுப்பொலிவு பெற்றிருக்கிறது என்று சொல்லக்கூடிய வகையில் வள்ளுவர் கோட்டம் அமைந்து கொண்டிருக்கிறது. இதில் ஒலி ஒளி காட்சி, அதேபோல் திருக்குறளைப் பற்றி ஒரு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் அதற்கான வகுப்புகள் இங்கு துவங்குகின்ற வகையில் இன்றைக்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வள்ளுவர் கோட்டம் பணியின் முன்னேற்றம் குறித்து அடிக்கடி கேட்டறிந்து கொண்டு இருக்கிறார்கள். அதே நேரத்தில், இதை விரைவாக திறக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

பொதுப்பணித் துறை மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் செய்தித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய இந்த வள்ளுவர் கோட்டப் பணிகள் முடிவுற்ற பிறகு, இங்கு சுமார் 1500 பேர் அமர்ந்து நிகழ்ச்சி நடத்தக்கூடிய வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. குளிர்சாதன வசதியோடு இந்த அரங்கங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு நிலையான ஒரு சின்னமாக அய்யன் திருவள்ளுவன் புகழை போற்றுகின்ற வகையில் இந்த வள்ளுவர் கோட்டம் அமைந்திருக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மயிலாப்பூரில் வள்ளுவருக்கு கோவிலை கட்டினார்கள். அதேபோல், வள்ளுவர் கோட்டம், இன்றைக்கு வெள்ளி விழா கண்டிருக்கக் கூடிய குமரிமுனையில் இருக்கக்கூடிய அய்யன் திருவள்ளுவர் சிலை என அய்யன் திருவள்ளுவருக்கு புகழ் சேர்க்கின்ற வகையில் திராவிட முன்னேற்ற கழக அரசு அய்யா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தாலும் சரி, அதேபோல் இன்றைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் இருந்தாலும் சரி, சிறப்பாக அய்யன் திருவள்ளுவரின் புகழை போற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் விரைவில் திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

கேள்வி: எந்த மாதம் திறக்கப்படும்?

பதில் : மே மாதம் இறுதிக்குள் பணிகள் நிச்சயமாக முடிவடையும். முதலமைச்சர் அவர்களின் நேரத்திற்கேற்ப இதற்கான தேதி நிர்ணயம் செய்யப்பட்டு திறப்பு விழா காணும்.

இந்த ஆய்வின்போது சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

கொளத்தூர் கபாலீஸ்வரர் கலை - அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான நேர்காணல்!

தேர்வு செய்யப்பட்ட 206 மாணவர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, ஏப்.23-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (21.04.2025) சென்னை, கொளத்தூர் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வளாக நேர்காணல் மூலம் (Campus Interview) தனியார் நிறுவனங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 206 மாணவ, மாணவியருக்கு அதற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது தொகுதியான கொளத்தூர் தொகுதியை தன் னிறைவு பெற்ற தொகுதியாக உருவாக்கிடும் வகையில் பல் வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றார். அந்த வகையில் ஏழை எளிய மாணவர்களின் உயர்கல்வி எந்த வகையிலும் தடைபடக் கூடாது என்பதற்காக கொளத்தூரில் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்கி வைத்தார். நான் காம் ஆண்டை நிறைவு செய்யும் இக்கல்லூரி மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் கல்விக் கட்டணமாக ரூ.10,000/- மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கி வருகின்றார். கடந்த ஆண்டு வளாக நேர்காணல் மூலம் 141 மாணவ, மாணவியரும், இந்தாண்டு 206 மாணவ, மாணவியரும் என ஒட்டுமொத்தமாக இரண்டாண்டுகளில் 347 மாணவ, மாணவியர் தனியார் நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ளனர். பணி நியமனம் பெற்ற மாணவ, மாணவியர் அனைவருக்கும் இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சார்பில் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். மாணவ செல்வங்களின் வாழ்வு எல்லா வகையிலும் சிறக்க இயற்கை மற்றும் இறைவனோடு சேர்ந்து எங்கள் முதல்வரும் துணையிருப்பார்.

கொளத்தூர், அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைவதற்கு காரணமாக இருந்து பல் வேறு சட்டப் போராட்டங்களில் வென்று கல்லூரியை தொடங்கி வைத்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். எழுத்தறிவித்தவன் இறைவன் என்பார்கள். அந்த வகையில் மாணவச் செல்வங்களாகிய உங்களுக்கெல்லாம் உயர்கல்வி பயிலும் வாய்ப்பினை தந்து, இன்று பணி நியமன ஆணைகள் கிடைப்பதற்கு காரணமாய் திகழ்பவர் நமது முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் என்பதனை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மாணவர்களாகிய நீங்கள் உங்களது இன்ப, துன்பங்களை எல்லாம் எங்களோடு பகிர்ந்து கொள்ளவதோடு, உங்களது கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும் அதனை எங்களுக்கு தெரியபடுத்துங்கள். எப்போதும் உங்களுக்கு உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு ரூ.25 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் புதிய கட்டிடம் விரைந்து முடிக்கப்பட்டு வரும் தைப் பொங்கலுக்கு முன்பாக திறக்கப்பட்டு மாணவ, மாணவியர் அப்புதிய கல்லூரி கட்டிடத்தில் வகுப்பினை தொடரும் சூழ்நிலை ஏற்படுத்தப்படும். இன்றைய தினம் மாணவச் செல்வங்களுக்கு பணி நியமனங்களை வழங்கியிருக்கின்ற தனியார் நிறுவங்களான Wheels India Ltd., Axis Bank, HDB Ltd., Jana Bank, NETAMBIT, MMC, V4U, Quess Corp Ltd., Q-Connect ஆகிய நிறுவனங்களின் அலுவலர்களுக்கு முதலமைச்சர் அவர்களின் சார்பிலும், இந்து சமய அறநிலையத்துறை சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த கல்லூரி மாணவச் செல்வங்களின் முழு கல்வி செலவையும் ஏற்று கொண்டதோடு, அவர்களுக்கு நிலையான வாழ்வாதாரம் கிடைத்திட அனைத்து வகையிலும் உதவியிருக்கின்ற தமிழகத்தின் தந்தை என்று போற்றப்படுகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பணி நியமன ஆணைகளை பெற்றிருக்கின்ற மாணவச் செல்வங்கள் என்றென்றும் நினைவில் வைத்து போற்றிட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், இணை ஆணையர்கள் திருமதி கி. ரேணுகாதேவி, திருமதி ஜ.முல்லை, திருமதி பெ.க. கவெனிதா, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், எவர்வின் பள்ளியின் தாளாளர் பா.புருஷோத்தமன், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி அமுதா, திருமதி ஸ்ரீதேவி, திருமதி யோகப்பிரியா மற்றும் ஐ.சி.எப்.முரளி, துரை, ராமச்சந்திரன், கல்லூரி முதல்வர் திருமதி சி.லலிதா, பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம், நெய்வேலி என்.எல்.சி தொ.மு.ச ,நிர்வாக குழு கூட்டம் தொ.மு.ச,கலைஞர் அரங்கத்தில் நடைப்பெற்றது. அகில இந்திய தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான மு.சண்முகம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். பேரவை தலைவர் கி.நடராஜன், பேரவை பொருளாளர் வள்ளுவன், பேரவை அமைப்பு செயலாளர் வேலுச்சாமி, என்.எல்.சி தொ.மு.ச தலைவர் பா .திருமாவளவன், பொதுச் செயலாளர் என் .பாரி, பொருளாளர் இரா .ஐயப்பன் அலுவலக செயலாளர் ஆர்.ஜெரால்டு, மற்றும் துணைத்தலைவர்கள், பகுதி செயலாளர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் என்.எல்.சி,ரகசிய வாக்கெடுப்பில் தொ.மு.ச,வரிசை எண்,6ல் போட்டியிடுகிறது.தொ.மு.ச,வை, முதன்மை சங்கமாக வெற்றிபெறுவதற்குரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா நினைவிடம் அருகே -

இளங்கோவடிகள் திருவுருவச் சிலைக்கு நாளை மலர் வணக்கம்!

அமைச்சர்கள் - மேயர் - தமிழறிஞர்கள் பங்கேற்பு!

சென்னை, ஏப்.23

இளங்கோவடிகள் வேந்தர் குலத்திற் பிறந்தவர், உயர் கல்வி பெற்று வளர்ந்தவர். கணியன் கூறியபடி அரசாளும் திருப்பொறி வாய்ந்தவர், காதலை வெறுத்தோ கடமைக்கு அஞ்சியோ இவர் துறவு மேற்கொள்ளவில்லை. மூத்தவன் ஆளும் அரச மரபு பிறழக்கூடாது என்பதற்காகவே துறவு மேற்கொண்டார். அடிகளான பின்னுங் கூட “குடக் கோச்சேரல் இளங்கோ” என்றே குறிப்பிடுகிறார்.

செந்தமிழ்ச்செல்வியின் காற்சிலம்பு காரணமாக அருந்தமிழ் அன்னைக்கு நூற்சிலம்பு அணிவித்த பெருமை இளங்கோவடிகளைச் சாரும். குலத்தாலும் குணத்தாலும், அரசியல் நெஞ்சம் வாய்ந்த ஒரு புலவர், காப்பியம் இயற்றினார் என்றால் சிலப்பதிகாரத்தின் சிறப்புக்கு வேறென்ன மாண்புகள் வேண்டும். “திங்களையும் ஞாயிற்றையும் மழையையும் புகாரையும் போற்றுவோம் வாரீர்” என்று அழைக்கின்றார். இளங்கோவடிகளின் சிலம்பின் தொடக்கமே நாட்டுப்பாடலாக ஒலிக்கின்றது. புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற தலைப்புக்களும் நாட்டு உணர்வைப் பெருக்குகின்றன ; நமக்குச் சிலப்பதிகாரம் பலவற்றை உரிமையாக்குகிறது.

இளங்கோவடிகள் தந்துள்ள சிலப்பதிகாரம் “முத்தமிழ்க்காப்பியம்” எனப் பெயர்பெற்றது. இயற்றமிழான உரைநடைப் பகுதிகளான இசைத்தமிழான பாடல் தொகுப்புக்களாகவும் காப்பியம் முழுவதுமே நாடக நூல் என்று புலவர் உலகமும் நாடகக் கலைஞர் உலகமும் ஒருமனதுடன் ஒப்புக்கொள்ளும் உண்மையுடையதாக பொலிகிறது.

தமிழ், இயல் இசை நாடகம் என்ற மூன்று கூறுகளைக் கொண்டது என்பது சிலப்பதிகாரத்தின் மூலம் தான் முதன்முதலில் உலகுக்கு அறிமுகமானது. அதற்கும் பின்னர் தான் “முத்தமிழ்” என்னும் சொல் புலவர் உலகில் வழக்கிற்கு வந்தது.

தமிழில் தோன்றிய ஆதி காவியம் என்ற தனிப் பெருமை சிலப்பதிகாரத்துக்கு மட்டுமே உள்ள சிறப்புரிமையாகும். தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. 1892-இல் முதன் முதலாகச் சிலப்பதிகாரம் முழுவதையும் உரைத்தெளிவுடன் வெளியிட்டார்.

இளங்கோவடிகளைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் ஏப்ரல் திங்கள் 24ஆம் நாளன்று சென்னை அண்ணா சதுக்கத்திலுள்ள இளங்கோவடிகள் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர்வணக்கம் செய்யப்பட்டு வருகிறது.

அவ்வகையில், 24.04.2025 வியாழக்கிழமையன்று காலை 9.15 மணிக்கு இளங்கோவடிகள் திருவுரு வச் சிலைக்கு மலர் வணக்கம் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

அமைச்சர் பெருமக்கள், மேயர், துணை மேயர், அரசு உயர் அலுவலர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் சு.மனோகர்– தலைமையில் சென்னை கிழக்கு மாவட்டம், திமுக சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு எழும்பூர் வடக்கு பகுதி சார்பாக மாபெரும் பொதுக்கூட்டம் – கழக துணைப்பொதுச்செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, நக்கீரன் பத்திரிக்கை ஆசிரியர் நக்கீரன் கோபால், பத்திரிக்கையாளர் பிரியன், பத்திரிக்கையாளர் திருமதி. லட்சுமி சுப்பிரமணியன் ஆகியோர் புகழுரைத்தனர்.